<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 18/2018 c/w அ.வ.எண். 124/2017**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>

<u>வாக்குமூலம் – வா.சா–2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுகன்யா | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் நாள் சாட்சியம்.

---

**<u>முதல் விசாரணை</u>**

நான் அசல் வழக்கு எண்.18/2018ல் 6ம் பிரதிவாதியின் மகள் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 17.07.2015 தேதியிட்ட 6ம் பிரதிவாதி பெரியசாமி தன் மகள் சுகன்யாவிற்கு எழுதி கொடுத்துள்ள பொது அதிகார பத்திரம் அசல்.

2. 20.09.1945 தேதியிட்ட சின்னராசாகவுண்டர் மக்கள் ராயப்பகவுண்டர் சின்னராயகவுண்டர், சின்னியகவுண்டர் ஆகியோர் செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

3. 12.04.2006 தேதியிட்ட 6ம் பிரதிவாதி பெரியசாமி, அவர் தகப்பனாரும் மற்றவர்களும் எழுதி கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல்.

4. 24.06.2025 தேதியிட்ட தாவா சொத்திற்குண்டான புலப்பட நகல்.

5. 24.06.2025 தேதியிட்ட க.ச.எண்.62/7 நெ காலைக்குண்டான கணினி சிட்டா.

6. 19.03.2015 தேதியிட்ட பரம்பிக்குளம் ஆழியாறு பொதுப்பணித்துறை வடிநிலக்கோட்டசெயற்பொறியாளர் பொள்ளாச்சி அவர்கள் நடவடிக்கை.

ஆகியவற்றை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.12** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.09.10 18:20:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.